S.P. Krishnamoorthy D.R.E.,
98422 97223
93450 97223
97505 30998
SINCE 1978
Nikon HARISON Photo Products
FLASH & CAMERA SERVICE
All Brand Digital Cameras, Flash, Umbrella Lights & Lens Service Etc.,
52, Elango Nagar, Sathy Road, ( Near Balaji Meter Service),
Gandhipuram Coimbatore - 641 044.
E-mail : nikonflashandcameraservice@gmail.com

RNI (PRGI) No.TNTAM/25/A0208

# உள்ளாட்சி அரசு

தினசரி தமிழ் காலை நாளிதழ்

"இயற்றலும் ஈட்டலுங் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு" திருவள்ளுவர்

youtube.com/@ullatchiarasu facebook.com/ullatchi.arasu.5

* COIMBATORE செவ்வாய் டிசம்பர் 17 * 2025 * மலர் -1 * இதழ்-199* VOL-1 * ISSUE-199 விலை ரூ.3 * பக்கம் -4

### தமிழகத்தில் 19– ஆம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல்:

# 97.4 லட்சம் பேர் நீக்கப்பட வாய்ப்பு!

## சென்னையில் மட்டும் அதிகபட்சம் 14.26 லட்சம் பேர் நீக்கப்படுகின்றனர்!!

சென்னை, டிச.17–

தமிழக வரைவு வாக்காளர் பட்டியல் இம்மாதம் 19–ஆம் தேதி வெளியிடப்படுகிறது. எல்லா மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் தான் அதிகபட்சமாக 97.4 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட வாய்ப்புள்ளது என செய்தி வெளியாகி உள்ளது. இது அதிர்வலைகளை உச்சப்படுத்தி உள்ளது. தமிழ்நாட்டில் சென்னையில் தான் அதிகபட்சமாக 14.26 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட வாய்ப்புள்ளது என்று செய்தி கசிந்துள்ளது.

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிரத் திருத்தம் முழு வீச்சில் மேற்கொள்ளப்பட்டது. மாநில தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் இப்பணியை கவனித்தார். எல்லா மாவட்டங்களிலும் அதிகாரிகள் முழு வீச்சில் பணியாற்றினர்.

தமிழக வரைவு வாக்காளர் பட்டியல் இம்மாதம் 19–ஆம் தேதி வெள்ளிக்கிழமை வெளியிடப்படுகிறது. வாக்காளர் பட்டியல் தொடர்பான சில விவரங்கள் கசிந்துள்ளன.

எல்லா மாநிலங்களைக் காட்டிலும் தமிழ்நாட்டில் தான் அதிகபட்சமாக 97.4 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர் என்று கூறப்படுகிறது. 97.4 லட்சம் பேரில் 52.6 லட்சம் பேர் (54.2 சதவிகிதம்) நிரந்தரமாக புலம்பெயர்ந்து சென்று விட்டனர். 26.9 லட்சம் பேர் (27.7 சதவிகிதம்) இறந்து விட்டனர். 13.6 லட்சம் பேரை (13.9 சதவிகிதம்) எங்கே இருக்கிறார்கள் என்பதை கண்டறிய முடியவில்லை. 3.98 லட்சம் பேர் (4.1 சதவிகிதம்) ஒன்றுக்கும் மேற்பட்ட இடங்களில் வாக்குரிமையை வைத்துள்ளனர். 16,400 பேர் (0.2 சதவிகிதம்) பற்றிய விவரங்களை அதிகாரிகளால் சேகரிக்க முடியவில்லை.



தமிழக வாக்காளர் பட்டியல் 6.4 கோடியில் இருந்து 5.44 கோடியாக குறைகிறது. இது 15.2 சதவிகித வீழ்ச்சியாகும். சென்னையில் அதிகபட்சமாக 14.26 லட்சம் பேர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட வாய்ப்புள்ளது. இது 35.6 சதவிகிதம் ஆகும்.

செங்கல்பட்டு மாவட்டத்தில் 7.02 லட்சம் பேரும் (25.2 சதவிகிதம்), திருப்பூரில் 5.64 லட்சம் பேரும் (23.1 சதவிகிதம்), கோயம்புத்தூரில் 6.51 லட்சம் பேரும் (20.2 சதவிகிதம்), காஞ்சிபுரத்தில் 2.74 லட்சம் பேரும் (19.6 சதவிகிதம்), திருவள்ளூரில் 6.20 லட்சம் பேரும் (17.3 சதவிகிதம்), திண்டுக்கல் மாவட்டத்தில் 3.25 லட்சம் பேரும் (16.8 சதவிகிதம்), வேலூரில் 2.15 லட்சம் பேரும் (16.5 சதவிகிதம்), ஈரோடு மாவட்டத்தில் 3.25 லட்சம் பேரும் (16.3 சதவிகிதம்), திருநெல்வேலி மாவட்டத்தில் 2.15 லட்சம் பேரும் (15.1 சதவிகிதம்) நீக்கப்பட வாய்ப்புள்ளது.

தமிழ்நாட்டிலேயே அரியலூர் மாவட்டத்தில் தான் குறைந்தபட்சமாக 4.6 சதவிகிதத்தினர் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

வாக்காளர் பட்டியலில் இருந்து 97.4 லட்சம் பேர் நீக்கப்பட்ட பிறகு எஞ்சியுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 5.44 கோடி மட்டுமே. தமிழக மக்கள் தொகையோடு ஒப்பிடும் போது இது குறைவாக உள்ளது என்பதை பல்வேறு தரப்பினரும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தமிழக வரைவு வாக்காளர் பட்டியல் இம்மாதம் 19–ஆம் தேதியன்று வெள்ளிக்கிழமை வெளியிடப்படுகிறது. இதில் சில குறைபாடுகள் இருக்க வாய்ப்புள்ளது. இதை நிவர்த்தி செய்ய அவகாசம் அளிக்கப்படுகிறது. திருத்தப்பட்ட வாக்காளர் பட்டியல் பிப்ரவரி மாதம் வெளியிடப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.



## தங்கம் விலை ரூ.1,320 குறைந்தது!

சென்னை, டிச.17

தங்கம் விலை நேற்று பவுனுக்கு ரூ.1,320 குறைந்தது. அதைப்போல வெள்ளி விலையிலும் கிராமுக்கு ரூ.4 வீழ்ச்சி அடைந்தது. தங்கமும், வெள்ளியும் ஒட்டி. பிறந்த இரட்டைச் சகோதாரிகள் போல விலை ஏற்ற–இறக்கத்தை சந்தித்து வருகின்றன. காலையில் ரூ.720–ம், மாலையில் ரூ.420–ம் அதிகரித்து ஒரு பவுன் ரூ.1 லட்சத்து 120 என்ற உயர் நிலையை எட்டியது. ஆனால் இன்று ரூ.1,320 குறைந்து ரூ.98,800 ஆக மாறியுள்ளது. வெள்ளி விலையும் நேற்று கடுமையாக உயர்ந்து கிராம் ரூ.215 என்ற நிலையை எட்டியது. இன்று ரூ.4 குறைந்து ரூ.211 ஆக விற்கப்படுகிறது.

## ஹஜ் இல்லம் பணிகள் விரைவில் முடியும்!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவு!

சென்னை, டிச. 17



ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ளும் இஸ்லாமியர்கள் பயன்பெறும் வகையில் சென்னை அண்ணா பன்னாட்டு விமான நிலையம் அருகில் கட்டப்படவுள்ள "தமிழ்நாடு ஹஜ் இல்லம்" கட்டுமானப் பணிக்கு அடிக்கல் நாட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு தமிழ்நாடு ஹஜ் இல்லம் குறித்து மார்ச் 3 அன்று அறிவித்தேன்; இன்று அடிக்கல் நாட்டியிருக்கிறேன் விரைந்து பணிகளை முடித்துத் திறந்து வைப்போம். இவ்வாறு அவர் கூறினார்.



விருதுநகர் மாவட்டம், திருச்சுழியில் மகளிர் தொழிற்பயிற்சி முகாம் நடந்தது. இதில் பங்கேற்ற பெண்களுக்கு அமைச்சர் தங்கம் தென்னரசு சான்றிதழ் வழங்கி பாராட்டினார்.



நாமக்கல் மாவட்டம், ராசிபுரம், வேலம்பாளையம், வெங்காயம் பாளையம் உள்ளிட்ட பகுதிகளில் குறைகேட்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அமைச்சர் மதிவேந்தன் கலந்து கொண்டு குறைகளை கேட்டறிந்து மனுக்களை பெற்றார்.

### ஈரோட்டில் மக்கள் சந்திப்பு:

## விஜய் கூட்டத்திற்கு மேலும் கட்டுப்பாடு!

சென்னை, டிச.17



ஈரோட்டில் நாளை மறுநாள் விஜய் நடத்தும் கூட்டத்துக்கு மேலும் சில கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய், ஈரோடு மாவட்டம் பெருந்துறை அருகே டிசம்பர் 14––ஆம் தேதி பொதுக்கூட்டம் நடத்த அனுமதி கேட்கப்பட்டது. ஆனால் அதற்கு அனுமதி கிடைக்கவில்லை.

எனவே பெருந்துறை அருகே விஜயமங்கலம் என்ற இடத்தில் புதிதாக 19 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. இங்கு 18–ஆம் தேதி கூட்டம் நடத்தப்படும் என்றும் கூறப்பட்டது.

இதற்கு 84 நிபந்தனைகள் விதிக்கப்பட்டன. நிலத்திற்கு வாடகை தொகையாக ரூ.50 ஆயிரமும், பாதுகாப்பு தொகையாக ரூ.50 ஆயிரமும் என ரூ.1 லட்சம் செலுத்தப்பட்டது.

கூட்டத்திற்கு 35 ஆயிரம் பேர் மட்டுமே அனுமதிக்கப்படுவார்கள் என்றும், கூட்டம் காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை மட்டுமே நடத்தப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டது.

இந்த நிலையில் மக்கள் அமரும் இடத்தில் கூரை அமைக்கப்பட வேண்டும் என்றும், ஒவ்வொரு பகுதியிலும் 80 சதவிகிதம் பேரை மட்டுமே அமர வைக்க வேண்டும் என்றும் புதிய நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருப்பதாக கூறப்படுகிறது.

மேலும் விஜய் எந்தப்பாதை வழியாக வருவார் என்பதை ஒரு நாளுக்கு முன்னரே தெரிவிக்க வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.



சென்னைநேருஉள்விளையாட்டரங்கில்நடைபெற்றவிழாவில்சென்னை,திருவள்ளூர், கோயமுத்தூர், திருப்பூர் மாவட்டங்களைச் சேர்ந்த நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரணங்களை வழங்குவதை தொடங்கி வைப்பதன் அடையாளமாக சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த மண்டலக் குழுத்தலைவர்களிடம் தலா 30 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரண தொகுப்புகளை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார். உடன் அமைச்சர்கள், மேயர் மற்றும் அதிகாரிகள் இருந்தனர்.



சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற விழாவில் சென்னை மாநகராட்சியைச் சேர்ந்த 200 வார்டுகளுக்கும் தலா 3 வீதம் 30 விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய டாக்டர் கலைஞர் விளையாட்டு உபகரண தொகுப்புகள் கொண்டு செல்லும் வாகனங்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

## புதுக்கோட்டை அருகே நாய் கடித்து 20 ஆடுகள் பலி!

புதுக்கோட்டை டிச.17

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே உள்ள பொன்னன் விடுதியில் நாய்கள் கடித்ததில் விவசாயி ஒருவரின் 20 ஆடுகள் பலியான சம்பவம் பரிதாபத்தை ஏற்படுத்தி உள்ளது.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே உள்ள பொன்னன் விடுதி கிராமத்தைச் சேர்ந்த விவசாயி முருகேசன் தனது தோட்டத்தில் கொட்டகை அமைத்து ஆடுகளை வளர்த்து வந்துள்ளார்.



இந்நிலையில் இன்று அதிகாலை அவரது கொட்டகைக்குள் புகுந்த நாய்கள் அங்கிருந்த 20 ஆடுகளை கடித்து கொன்றுள்ளன. இதனைப் பார்த்துஅதிர்ச்சிஅடைந்த விவசாயி முருகேசன் உள்ளிட்ட அந்த கிராமத்தினர் வேதனையில் ஆழ்ந்துள்ளனர். பொன்னன்விடுதி வெட்டன்விடுதி உள்ளிட்ட பகுதிகளில் வெறி நாய்கள் அதிக அளவில் சுற்றித் திரிவதாகவும் அவற்றை கட்டுப்படுத்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அந்த பகுதி விவசாயிகளும் பொதுமக்களும் வேதனையோடு கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் பொங்கல் வியாபாரத்திற்காக ஆடுகளை விவசாயி முருகேசன் வளர்த்து வந்த நிலையில் தற்பொழுது நாய்கள் ஆடுகளை கடித்து குதறி 20 ஆடுகள் உயிரிழந்துள்ளதால் செய்வது அறியாமல் தவித்து வருவதாகவும் அதனால் அரசு உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என கண்ணீர்மல்க கோரிக்கை விடுத்துள்ளார்.



சென்னை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் அமைக்கப்பட்டுள்ள முதலமைச்சர் பாக்ஸ் கிரிக்கெட் இளையோர் விளையாட்டரங்கத்தை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்து பார்வையிட்டார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம் திருநாவலூரில் உள்ள மேம்படுத்தப்பட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை உளுந்தூர்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் ஏஜே மணி கண்ணன் திடீர் ஆய்வு மேற்கொண்டார். அப்போது அரசு மருத்துவர் செல்வி அவர்களிடம் மருத்துவமனைக்கு தேவையான உபகரணங்கள் வேண்டுமென்றால் உடனடியாக தெரிவித்து, நோயாளிகளுக்கு பயன்பெறும்வகையில் வழங்கப்படும் என்றார். ஆய்வின் போது மருத்துவர்கள் பொதுமக்கள் உடன் இருந்தனர்.




# ஆம்பூர் அருகே ஆதர்ஷ் இலைட் சர்வதேச பள்ளி திறப்பு விழாவில் ரோபோட் டீச்சர் அறிமுகம்!

ஆம்பூர், டிச.17

திருப்பத்தூர் ஆம்பூர் அடுத்த மின்னூர் பகுதி பெங்களூர் சென்னை தேசிய நெடுஞ்சாலையில் ஆதர்ஷ் இலைட் சர்வ தேச பள்ளியின் திறப்பு விழா பள்ளி வளா கத்தில் நடைபெற்றது.

விழாவுக்கு பள்ளி நிறுவனரும் தாளாள ருமான எம்.செந்தில் குமார் தலைமை வகித்தார்.பொருளாளர் எம்.உதயசந்தர் முன்னிலை வகித்தார். எஸ்.கே ஷபானா பேகம் அனைவரையும் வரவேற்றார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக காவல் துறை துணைத்தலைவர் டாக்டர் கே. எஸ்.பாலகிருஷ்ணன் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி பள்ளியை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்களாக சி.பி.எஸ்.சி பிராந்திய அலுவலக முன் னாள் இணை செயலாளர்

டி.டி சுதர்சன் ராவ் மற்றும் தமிழ்நாடு தனியார் பள்ளிகள் சங்க பொதுச் செயலா ளர் டாக்டர் கே.ஆர்.நந்தகுமார் ஆகி யோர் கலந்து கொண்டு குத்துவிளக்கு ஏற்றி வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் கே.சி.வீரமணி கலந்து கொண்டு ஒருங்கி ணைந்த வேலூர் மாவட்டத்தில் முதல்மு றையாக ரோபோட் டீச்சர் அறிமுகம் செய்து பேசினார்.

இதில் வாணியம்பாடி சட்டமன்ற உறுப்பினர் கோ.செந்தில் குமார், வாணி யம்பாடி முத்தமிழ் மன்ற செயலாளர் என்.பிரகாசம், ஆடிடர் ஜி.பாரி, மூத்த வழக்கறிஞர் ஆர்.வி. வரதராஜன், இந்திய மருத்துவ சங்கம் வாணியம்பாடி கிளை செயலாளர் மருத்துவர் ஜெ.டேவிட் விமல் குமார், மருதர் கேசரி ஜெயின் மக ளிர் கல்லூரி துணைத் தலைவர் ஸ்ரீபால் குமார் ஜெயின், டாக்டர் எஸ்.பசுபதி, டாக்டர் கயல்விழி ஆகியோர் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினர்.

நிகழ்ச்சியில் வாணி செந்தில் உட்பட பள்ளி நிர்வாக உறுப்பினர்கள், தொழில திபர் ஆர்.ஆர்.வாசு, வணிகர் சங்கங்க ளின் பேரமைப்பு மாவட்ட செயலாளர் கே.பி.எஸ். மாதேஸ்வரன், பொருளாளர் ஏ.ஜி.எஸ்.செந்தில் முருகன், ஆலங்கா யம் முன்னாள் ஒன்றி குழு தலைவர் எம். கோபால், வழக்கறிஞர் ஏ.சி.தேவகுமார் உட்பட பள்ளி ஆசிரியர்கள், பெற்றோர் கள் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

முடிவில் ஆதர்ஷ் மெட்ரிக் மேல்நி லைப்பள்ளி நிர்வாக முதல்வர் சத்திய கலா நன்றி கூறினார்.



திருப்பூர் கிழக்கு மாவட்டம் தாராபுரம் மேற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட பொட்டிக்காம்பாளையம் ஊராட்சியில், என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பாகம் எண் 41,42,43,44,நிகழ்ச்சியில் மேற்கு ஒன்றிய கழகச் செயலாளர் முன்னாள் ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவருமான S.V. செந்தில்குமார் தலைமையில் நடைபெற்றது கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர் K.S. தனசேகர் கலந்துகொண்டு கழக நிர்வாகிகளுக்கு கழகப் பணிகள் வெற்றிக்கான ஆலோசனைகளையும் வழங்கினர். கூட்டத்தில் பாகம் முகவர்கள் மற்றும் த.மு.க. நிர்வாகிகள், இளைஞர் அணி நிர்வாகிகள் பெருந்திரளராக கலந்து கொண்டனர்.

# புதுக்கோட்டையில் டாக்டர் ஆர் ஜி ஆனந்த் எழுதிய மோடியின் சாதனைகளை விளக்கும் 'ஓரே நாடு ஓரே புத்தகம்' வெளியீட்டு விழா!

புதுக்கோட்டை டிச 17

புதுக்கோட்டை எல்ஐசி அலுவலகம் அருகே தனியார் மஹாலில் மாண்புமிகு பாரத பிரதமர் நரேந்திர மோடி ஆட்சிப் பொறுப்பேற்று நிதித்துறை முதல் நீதித் துறை வரை

54 அரசு துறைகளில் அவர் மேற் கொண்ட அதிரடி சீர்திருத்தங்களையும் சாதனைகளையும் விரிவாக விளக்கி முன் னாள் தேசிய குழந்தைகள் ஆணைய உறுப்பினர் டாக்டர் ஆர் ஜி ஆனந்த் பிரம் மாண்டமாக

உருவாக்கியுள்ள "ஒரே நாடுஒரே புத்த கம்" பிரதியை பாரதிய ஜனதா கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு உறுப்பின ரும் ஆதிசாய் ஐஏஎஸ் அகாடமியின் தலைவருமான ஏவிசிசி கணேசன் இன்று புதுக்கோட்டையில் வெளியிட்டார்.

அதன் முதல் பிரதியை மூவேந்தர் முன் னேற்ற முன்னணி கழகத்தின் மாவட்ட தலைவர் மாரையாப்பட்டி செல்வராஜ் பெற்றுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் ஓய்வுபெற்ற டெபுடி



கலெக்டர் கிருஷ்ணமூர்த்தி பாஜக புதுக் கோட்டை மாநகர் முன்னாள் தலைவர் கள் சுப்பிரமணியன் லெட்சுமணன் அஇ அதிமுக

அண்ணா தொழிற்சங்க மாவட்ட இணைச் செயலாளர் மீனாஸ் சிங்கமுத்து தமிழ்நாடு அகமுடையார் மகா சபையின் மாவட்ட தலைவர் அசோக்குமார் விஜய காந்த் ரசிகர் மன்ற நிர்வாகிகள் சபரி இளங்கோ பூக்கடை ஆனந்த் உள்ளிட்ட பல்வேறு பிரமுகர்கள் மற்றும் பொதுமக் கள் கலந்துகொண்டு மோடியின் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சாதனைகளுக்கு புதுமையான வடிவம் தந்துள்ளதாக டாக் டர் ஆர் ஜி ஆனந்திற்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர் .

## ஓவியர்களுக்கு

# அரசு துறை சார்ந்த பணிகள் வழங்க கோரி கலெக்டர் அலுவலகத்தில் மனு!

திருப்பத்தூர் டிச.17

திருப்பத்தூர் மாவட்டம், ஓவியர்களுக்கு அரசு துறை சார்ந்த பணிகள் வழங்க கோரி மாவட்ட ஆட்சியர்அலுவலகத்தில் மனு அளித்தனர். திருப்பத்தூர் மாவட்டத்தில் உள்ள ஓவியக் கலைஞர்களுக்கு அரசாங்கத்தின் மூலம் வரும் துறை சார்ந்த ஓவியம் வரைதல், விளம்பரப் பலகை எழுதுதல் உள்ளிட்ட பணிகளை வழங்க வேண்டும் என வலியுறுத்தி, ஓவியர்கள் திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவல கத்தில் மனு அளித்தனர். திருப்பத்தூர் மாவட்டம் முழுவதும் சுமார் 120 ஓவியக் கலைஞர்கள் உள்ளனர். இவர்கள் அனைவரும் ஓவியக் கலையையே முழுமையாக நம்பி தங்களது குடும்பங்களைநடத்திவருகின்றனர்.இந்த120ஓவியர்களை சார்ந்த குடும்பங்களின் வாழ்வாதாரம் முழுவதும் ஓவியத் தொழில்மீதே தங்கியுள்ளது. ஆனால், பிளக்ஸ் பிரிண்டிங் பயன்பாடு அதிகரித்ததாலும், தொழில்நுட்ப வளர்ச்சியாலும் பாரம்பரிய ஓவியத் தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இதனால் முன்புபோல் வேலை வாய்ப்புகள் கிடைக்காமல், போதிய வருமானம் இன்றி ஓவியர்கள் சிக்கலில் சிக்கி வருகின்றனர். எனவே, தங்களது வாழ்வாதாரத்தை பாதுகாக்கும் வகையில், திருப்பத்தூர் மாவட்டத்திற்கு அரசாங்கத்தின் மூலம் வரும் துறை சார்ந்த விளம்பரப் பணிகள், ஓவியம் வரைதல், விளம்பரப் பலகை எழுதுதல், விழிப்புணர்வு ஓவியங்கள், அரசு விளம்பரப் போட்டிகள் உள்ளிட்ட அனைத்து ஓவியச் சார்ந்த பணிகளையும் மாவட்டத்தில் உள்ள ஓவியக் கலைஞர்களுக்கே வழங்க வேண்டும் என அந்த மனுவில் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த கோரிக்கையை மாவட்ட நிர்வாகம் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் ஓவியக் கலைஞர்கள் எதிர்பார்ப்பு தெரிவித்துள்ளனர்.

# திருக்குறள் முற்றோதல் நிகழ்வு; பள்ளி மாணவனுக்கு பாராட்டு!

ஆண்டிபட்டி, டிச. 17

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தமிழ் வளர்ச்சி துறை சார்பில் திருக்குறள் முற்றோதல் நிகழ்வு நடைபெற் றது. இதில் ஏராளமான பள்ளியை சேர்ந்த மாணவ மாண விகள் கலந்து கொண்டனர். இதில் ஆண்டிபட்டி அருகே அமைந்துள்ள தி லிட்டில் பிளவர் மெட்ரிகுலேஷன் பள்ளி யைச் சேர்ந்த ஐந்தாம் வகுப்பு மாணவன் பெ.ஹரி விஜய் என்ற மாணவன் 1330 திருக்குறள்களையும் சிறப்பாக முற் றோதல் செய்தார். இதனை தமிழ் வளர்ச்சி துறை உதவி இயக்குனர் மற்றும் நடுவர்கள் மாணவனுக்கு வாழ்த்துக் களை தெரிவித்தார்கள். மேலும் பள்ளி நிர்வாகம், முதல்வர் உமா மகேஸ்வரி, மற்றும் ஆசிரியர்கள் பாராட்டி வாழ்த்துக் களை தெரிவித்தனர்.



# ஆம்பூர் அருகே 2 வீடுகளில் மிளகாய் பொடி தூவி 2 சவரன், 60 ஆயிரம் ரொக்கம் கொள்ளை!

ஆம்பூர்.டிச.17

திருப்பத்தூர் மாவட்டம் ஆம்பூர் அடுத்த சான்றோர் குப்பம், கண்ணதாசன் பகுதியை சேர்ந்தவர் நரேந்திரன். இவர் நேற்று குடும்பத்தினருடன், விரிஞ்சிபுரம் பகுதி யில் உள்ள சிவன் கோவிலுக்கு சென்று இருந்தார்.

இதனை அறிந்த கொள்ளையர்கள் அவரது வீட்டின் பூட்டை உடைத்து உள்ளே சென்ற மர்ம நபர்கள் பீரோ வில் இருந்த 1. 1/2 சவரன் தங்க நகை மற்றும் 60 ஆயிரம் ரொக்கம் கொள்ளையடித்த பின்னர் சமையல் அறையில் இருந்த உப்பு மற்றும் மிளகாய் தூளை வீடு முழுவதும் கொட்டிச்சென்றுள்ளனர்.அதே போல் அருகில் இருந்த கார்த்திக் என்பவர் நேற்று இரவு, தனது தாய் வீட்டிற்கு உறங்க சென்ற போது, அவரது வீட்டின் பூட்டை உடைந்து உள்ளே நுழைந்த கொள்ளையர்கள், 10 ஆயி ரம் ரூபாய் பணத்தையும் 1/2 சவரன் தங்க மோதிரத்தை கொள்ளையடித்து சென்று இருந்தனர்.

இன்று காலை நரேந்திரன் மற்றும் கார்த்திக் ஆகியோர் வீட்டிற்கு வந்து பார்த்த போது, வீட்டின் பூட்டு உடைக் கப்பட்டு, பணம் மற்றும் நகை கொள்ளையடிக்கப்பட் டிருப்பது தெரிய வந்துள்ளது,

சம்பவம் குறித்து இருவரும் ஆம்பூர் நகர காவல்நிலை யத்தில், புகார் அளித்தனர். புகாரின் பேரில் நகர போலீ ஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை மேற்க்கொண்டு கொள்ளை சம்பவம் குறித்து வழக்குப திவு செய்து கொள்ளையர்களை தேடி வருகின்றனர்.

## தமிழ்நாட்டில் சீரான, தொடர்ச்சியான வளர்ச்சியுடன்

# கிரிப்டோ வர்த்தகம் முன்னிலை – காயின்ஸ்விட்ச் ஆண்டு அறிக்கை 2025!

சென்னை டிச.17

இந்தியாவின் மிகப்பெரிய கிரிப்டோ வர்த்தக தளமான காயின்ஸ்விட்ச், தனது ஆண்டு அறிக்கை 'இந்தியாவின் கிரிப்டோ போர்ட்ஃபோலியோ: இந்தியா எப்படி முதலீடு செய்கிறது – 2025' வெளியிட்டுள்ளது. 2.5 கோடி பயனர்களின் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட இந்த அறிக்கை, மெட்ரோ அல்லாத பகுதிகளில் கிரிப்டோ முதலீடு வேகமாக வளர்ந்து வருவதை காட்டுகிறது. இதில் தமிழ்நாடு, சீரான வளர்ச்சி, கட்டுப்பாடு மற்றும் புதிய முதலீட்டு வாய்ப்புகளை ஆராயும் முதிர்ந்த கிரிப்டோ சந்தையாக குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாடு, இந்தியாவின் முதல் 10 மாநிலங்களில் ஒன்றாக இருந்து, மொத்த கிரிப்டோ முதலீட்டில் 4.9% பங்களிக்கிறது. காயின்ஸ்விட்ச்சின் இணை நிறுவனர் ஆஷிஷ் சிங்கால், "2025 இந்தியாவின்கிரிப்டோசந்தைக்குமுதிர்ச்சியடைந்த ஆண்டாகும்" என்று தெரிவித்தார். தமிழ்நாட்டின் போர்ட்ஃபோலியோ அமைப்பில் பிட்காயின் (BTC) அதிகம் முதலீடு செய்யப்பட்ட சொத்தாகவும், ரிப்பிள் (XRP) அதிகம் வர்த்தகம் செய்யப்பட்ட நாணயமாகவும் உள்ளது. மொத்தமாக, நிலையான முதலீட்டாளர் ஆர்வம், சமநிலையான சொத்து ஒதுக்கீடு மற்றும் இளைஞர் பங்கேற்பு ஆகியவை, இந்தியாவின் கிரிப்டோ சூழலில் தமிழ்நாட்டின் முக்கியத்துவத்தை உறுதி செய்கின்றன.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு பெருநகர சென்னை மாநகராட்சி, வி.க.நகர் மண்டலம், வார்டு78, நரசிங்க பெருமாள் கோவில் தெருவில் பல்நோக்கு மையக் கட்டடம் கட்டும் பணியினை அடிக்கல் நாட்டித் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வின் போது, மேயர் ஆர்.பிரியா மண்டலக் குழுத் தலைவர் சரிதாமகேஷ்குமார், நியமன குழு உறுப்பினர் சொ.வேலு, மாமன்ற உறுப்பினர்கள் ராஜேஸ்வரி ஸ்ரீதர், சுமதி, புனிதவதி எத்திராஜன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.





பெருநகரசென்னைமாநகராட்சியின்சார்பில், மெரினாநீலக்கொடிகடற்கரைப்பகுதியில் நடைபெற்ற தமிழ்நாடு பாரம்பரிய கலை நிகழ்ச்சிகளை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.




கோவிட் காலகட்டத்தில் பொதுமக்களுக்கு தேவையான அத்தியாவசிய உணவு பொருட்கள், மருத்துவ உதவி, கல்வி ஊக்க தொகை என பொதுமக்களுக்கு வழங்கிய. சமுக சேவகை கௌசல்யா அவர்களை பாராட்டும் விதமாக குளோபல் ஹூமன் பீஸ் பல்கலைக்கழக சார்பில் முனைவர் பட்டம் வழங்கி கௌரிக்கப்பட்டது.



# கம்பத்தில் நமது மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் இலவச மருத்துவ முகாம்; ஆயிரம் பேர் பங்கேற்பு!

கம்பம் .டிச.17

தேனி மாவட்டம் கம்பத்தில் நமது மக் கள்முன்னேற்றக்கழகம் மதுரைமீனாட்சி மிஷன் மருத்துவமனை இணைந்து இல வச மருத்துவ முகாம் தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது,

மருத்துவ முகாமை, நமது மக்கள் முன் னேற்றக் கழகத்தின் நிறுவன தலைவர் பி.எல்.ஏ.ஜெகநாத் மிஸ்ரா தொடங்கி வைத்தார், கட்சியின் துணை பொதுச்செ யலாளர் கூடல் செல்வேந்திரன் முன் னிலை வகித்தார்.கம்பம் நகர செயலாளர் கள் அய்யர், சுப்பிரமணி ஆகியோர் அனைவரையும் வரவேற்றனர். மதுரை மீனாட்சி மிஷன் டாக்டர் அசோக்குமார் தலைமையில் மருத்துவக் குழுவினர் பொதுமக்களுக்கு பொது மருத்துவம் கண் மருத்துவம். சர்க்கரை நோய் இருதய நோய்கள் மற்றும் பல்வேறு விதமான நோய்களுக்கு சிகிச்சைகள் மருத்துவ ஆலோசனைகள் வழங்கினார்கள். சிகிச்சை பெற்றவர்களுக்கு மருந்து மாத் திரைகளும் இலவசமாக வழங்கப்பட் டது. முகாமில், மாநில போக்குவரத்து பிரிவு செயலாளர் நந்தகுமார், கம்பம் தொகுதி செயலாளர் .அபுதாகீர், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் அருண்குமார், மாவட்ட இளைஞரணி செயலாளர் தங்கபாண்டி, கம்பம் நகர இளைஞர் அணி அமைப்பாளர் அப் ரிடி, மாவட்ட மகளிர் அணி செயலாளர் கிருஷ்ணவேணி, மனித நேயமக்கள் கட்சி மாவட்ட செயலாளர் அப்பாஸ் மந் திரி மாவட்ட பொதுசெயலாளர் சாதிக் அலி மாவட்ட செயலாளர் தாவு த்நிஸார், மாநிலபொது செயலாளர் யாசர் அரபாத் த.மு.மு.க நகர தலைவர் ஜெய்லானி மற் றும் பலர் கலந்து கொண்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் கூட்டத்தில் தமிழக விவசாயிகள் சங்கத்தின் மாநில தலைவர் இராமகவுண்டர் மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமாரை சந்தித்து கோரிக்கை மனுவினை கொடுத்தார்.

Owned, Printed and Published by N. JAYAPRAKASH printed at Ali Mohamed Sayeed Offset Printers NO.29, V.N. DASS ROAD, BORDER THOTTAM, MOUNT ROAD Chennai 600002. Published from Old No. 73/C 13 Nagaratchi cleaners colony, Housing unit, south ukkadam Coimbatore641 001. Editor: N.JAYAPRAKASH



சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம் மாநகராட்சி, அம்மாபேட்டையில் புதிய நியாய விலை கடையினை திறந்து வைத்தார்கள். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ரவிக்குமார், சேலம் மாநகராட்சி ஆணையாளர் மா.இளங்கோவன், கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் ராஜ்குமார், அம்மாப்பேட்டை மண்டல குழுத்தலைவர் கே.டி.ஆர்.தனசேகர் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் க.தர்ப்பகராஜ், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்டார்.

### எடப்பாடி பழனிசாமி முன்னிலையில்

## அ.தி.மு.க.வில் இணைந்த கிருஷ்ணகிரி முன்னாள் நகர் மன்ற தலைவி!

### தி.மு.க. நிர்வாகிகள், ஆதரவாளர்களும் உடன் சென்று கட்சி மாறினர்!!

கிருஷ்ணகிரி, டிச.17–

அதிமுக துணை பொது செயலாளர், வேப்பனப்பள்ளி சட்டமன்ற உறுப்பினர் கே.பி.முனுசாமி அவர்களின் ஏற்பாட்டில், சென்னையில் இன்று காலை அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் கிருஷ்ணகிரி முன்னாள் தி.மு.க. நகர செயலாளர் நவாப் மற்றும் திமுக முன்னாள் நகர் மன்ற தலைவர் பரிதாநவாப் உட்பட 50க்கும்மேற்பட்டதி.மு.க.நிர்வாகிகள் தங்களை அ.தி.மு.க.வில் இணைத்துக் கொண்டனர். கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக திமுக கட்சியில் இருந்த நவாப்தி.மு.க.நகரசெயலாளர்பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டு, நகர் மன்ற தலைவராக உள்ள அவரது மனைவி பரிதாவுக்கு எதிராக, திமுக கவுன்சிலர்களால் நம்பிக்கை இல்லா தீர்மானம் நிறைவேற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது.

நிகழ்ச்சியில் அதிமுக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் கே. அசோக்குமார் எம்.எல்.ஏ, ஊத்தங்கரை எம்.எல்.ஏ தமிழ்செல்வம், இளைஞர் நலன் மற்றும் இளம் பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் கே பி எம் சதீஷ்குமார், கிருஷ்ணகிரி அதிமுக நகர செயலாளர் கேசவன், ஒன்றிய செயலாளர்கள் பையூர் ரவி, பாபு என்கின்ற வெங்கடாசலம், மாவட்ட விவசாய அணி மோகன், மாவட்ட வழக்கறிஞர் பிரிவு செயலாளர் ஜெயக்குமார், மாவட்ட அம்மா பேரவை செயலாளர் மாதையன், மாவட்ட சிறுபான்மை பிரிவு செயலாளர் மக்பூல், மாவட்ட இளைஞர் அணி செயலாளர் கார்த்திக், எம்ஜிஆர் மன்ற துணைச் செயலாளர் ஆறுமுகம், முன்னாள் நகர் மன்ற துணைத் தலைவர் வெங்கடாசலம், அதிமுக நிர்வாகி ஏஜாஸ் உள்ளிட பலர் கலந்துகொண்டனர்.



### திருப்பத்தூர் அருகே

## புதூர்நாடு மலைகிராமத்தில் சொத்திற்காக தாயை கொலை செய்த மகள் , மருமகன் கைது!

வாணியம்பாடி, டிச.17

திருப்பத்தூர் மாவட்டம் திருப்பத்தூர் அடுத்த புதூர்நாடு மலைகிராமம் நடுகுப்பம் பகுதியை சேர்ந்தவர் சின்னகாளி. இவர் கணவனை இழந்து தனது மகளுடன் வசித்து வந்துள்ளார்.

இந்நிலையில் சின்னகாளி கடந்த சில தினங்களுக்கு முன்பு அதே பகுதியில் உள்ள நிலத்தில் தலையில் காயங்களுடன் சடலமாக மீட்கப்பட்டார்.

சம்பவம் குறித்து திருப்பத்தூர் கிராமிய போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை மேற்க்கொண்டதில் சின்னகாளியின் மகள் கீதா அவரது தாய் பெயரில் உள்ள 6 ஏக்கர் சொத்தை தனது பெயரில் மாற்றி எழுதிதரக்கூறி அவரிடம் கடந்த ஒரு மாதத்திற்கு மேலாக சண்டையிட்டு வந்ததாகவும்,

சின்னகாளி மகள்கீதாவிற்கு சொத்தை எழுதிதர மறுத்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த மகள் கீதா தனது கணவர் சிதம்பரம் உடன் சேர்ந்து தாயை கொலை செய்ய திட்டம் தீட்டி, சம்பவத்தன்று கீதா தனது கணவர் காட்டிற்குள் சென்றுள்ளதாகவும் அவரை தேடிச்செல்ல கூட வரும்படி அழைத்துள்ளார்.


இதனை நம்பி தனது மகளுடன், சென்ற சின்னகாளியை, காட்டுப்பகுதியில் மறைவான இடத்தில் வைத்து மருமகன் சிதம்பரம் கல்லைக்கொண்டு மாமியார் சின்னக்காளி தலையில், தாக்கிகொலைசெய்ததுவிசாரணையில் தெரியவந்தது.

இதனைத் தொடர்ந்து கீதா மற்றும் அவரது கணவர் சிதம்பரத்தை போலீஸார் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தி சிறையில் அடைத்தனர்.

## "நப்பா டோரி தையலின் நுணுக்கமும் காலத்தால் அழியாத ஸ்டைலும் – டோரி அட்டேலியர் குருகிராமில் திறப்பு"!

சென்னை டிச. 17

டோரி அட்டேலியர் – குருகிராமில் புதிய அனுபவ மையம்நப்பா டோரியின் வடிவமைப்பு சிந்தனையின் தொடர்ச்சியாக உருவான டோரி அட்டேலியர், குருகிராமில் கிராண்ட் வியூ ஹை ஸ்ட்ரீட்டில் திறக்கப்பட்டது. இங்கு நுண்மையான தையல் கலையும் கைவினைத் தோல் கலைப்பாடுகளும் இணைந்து, காலத்தால் அழியாத அழகையும் நவீன கலைநயத்தையும் கொண்ட ஒரு மேம்பட்ட ஷாப்பிங் சூழலை வழங்குகிறது. வெப்பமான மரத் தோற்றங்கள், பொலிவூட்டப்பட்ட பித்தளை அம்சங்கள் மற்றும் கவனமாக அமைக்கப்பட்ட பசுமைச் செடிகள் இடத்திற்கு அமைதி, நெருக்கம் மற்றும் அழகான சூழலை உருவாக்குகின்றன. அட்டேலியரில் வழங்கப்படும் அனுபவம் மையத்தில் டோரி கிளோதிங் அமைந்துள்ள இந்த அட்டேலியர், ஆண்களுக்கு நேர்த்தியான ஆடைகளை வழங்குகிறது.



ஒவ்வொரு ஆடையும் நவீன தோற்றத்தையும் பாரம்பரிய தையல் முறையையும் இணைத்து, அணிவதற்கு எளிமையாகவும் அழகாகவும் வடிவமைக்கப்பட்டுள்ளது. தனிப்பட்ட உதவியுடன் துணிகள், அளவுகள் மற்றும் வடிவங்களை பரிசீலிக்க முடியும், மேலும் தையல் கருவிகள் மற்றும் கைவினை சின்னங்கள் ஒவ்வொரு தயாரிப்பின் பின்னணி முயற்சியையும் வெளிப்படுத்துகின்றன. கைவினை, தரம் மற்றும் தனித்துவம் டோரி அட்டேலியரில் தோல் தயாரிப்புகள், பணப்பைகள் மற்றும் பெல்ட்கள் போன்ற தினசரி பயன்பாட்டு பொருட்களும் கவனமாக தேர்வு செய்யப்பட்டு வழங்கப்படுகின்றன.

## உடல் பருமன் , நீரிழிவு நோய்க்கான சிகிச்சைக்கு சிப்லா நிறுவனம் யுர்பீக்® (டிர்செபடைடு) மருந்தை அறிமுகப்படுத்தியுள்ளது!

திருச்சி டிச. 17

சிப்லா லிமிடெட் (BSE: 500087; NSE: சிப்லா) இன்று, உடல் பருமன் மற்றும் வகை 2 நீரிழிவு நோயை (T2DM) நிர்வகிப்பதற்கான வாராந்திர ஊசி சிகிச்சையான யுர்பீக்® (டிர்செபடைடு)ஐ இந்தியாவில் அறிமுகப்படுத்தியுள்ளது. லில்லி நிறுவனத்துடன் கூட்டு ஒப்பந்தத்தின் மூலம், DCGI ஒப்புதல் பெற்ற பிறகு, சிப்லாவுக்கு இந்தியாவில் இதனை விநியோகிப்பதும் விளம்பரப்படுத்துவதும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

சிப்லாவின் உலகளாவிய தலைமைச் செயல்பாட்டு அதிகாரி அச்சின் குப்தா இந்த அறிமுகம், நாள்பட்ட நோய்கள் மற்றும் பெரும் சுமையைக் கொண்ட நோய்களுக்கு எதிரான போராட்டத்தில் மாற்றத்தக்க தருணமாகும் என்று தெரிவித்துள்ளார்.

யுர்பீக்® என்பது முதல் மற்றும் ஒரே இரட்டை தூண்டிய குளுக்கோஸ்சார்ந்த இன்சுலினோட்ரோபிக் பெப்டைடு (GIP) மற்றும் குளுக்ககோன்போன்ற பெப்டைடு1 (GLP1) ஏற்பி ஆகும். சிப்லா, யுர்பீக்® அறிமுகத்துடன், நாட்டின் பெரும் பகுதிகள் மற்றும் பெருநகரங்களுக்கு அப்பாற்பட்ட பகுதிகளுக்கு மருந்து கிடைக்கும் அணுகலை உறுதி செய்வதில் முக்கிய முன்னுரிமை கொடுக்கிறது.

மேலும், நோயாளி கல்வி மற்றும் ஆதரவு திட்டங்களை உருவாக்கி, மருந்து அளவு, சுயநிர்வாகம் மற்றும் பாதுகாப்பான பயன்பாட்டில் வழிகாட்டுதல்கள் வழங்குகிறது.

லில்லி தயாரித்த யுர்பீக்® சிப்லா மூலம் விநியோகிக்கப்படுகிறது, விலை மௌன்ஜாரோ®வுக்கு சமமாக இருக்கும், மற்றும் இந்த முயற்சிகள் சிப்லாவின் ஆதார அடிப்படையிலான, பொறுப்பான சிகிச்சை நெறிமுறைகளுடன் ஆதரிக்கப்படுகின்றன.

## சாஷாவின் புதிய நாவல் "You Make Yourself" வெளியீடு!



சென்னை டிச.17

பிரதம விருந்தினர்: வள்ளல் வாரியார் சுவாமிகளின் சீடர், கலைமாமணி ஸ்ரீமதி. தேச மங்கையர்க்கரசி அவர்களின் வருகை, நாவலின் வெளியீட்டை சிறப்பித்தது. எழுத்தாளர் சாஷா (சரஸ்வதி சண்முகராஜா) எழுதிய "You Make Yourself" சமுதாய எதிர்பார்ப்புகளின் அழுத்தங்கள், குடும்பத்திற்காக மறைத்துக் கொள்ளும் உணர்வுகள் மற்றும் பெண்கள் மௌனமாக சுமக்கும் மன வேதனைகளுக்கு குரலாக உருவாகியுள்ளது. கதாநாயகி சிந்து என்ற பெண்ணின் மனம், புத்தி மற்றும் வாழ்க்கைப் பயணத்தை மையமாகக் கொண்டு, துரோகம், தனிமை, அவமதிப்பு மற்றும் மனச்சோர்வு போன்ற சோதனைகளை எதிர்கொண்டு தன்னை மீண்டும் உருவாக்கிக் கொள்ளும் உறுதியையும் நெகிழ்வாக வெளிப்படுத்துகிறது. நாவல் வாசகர்களுக்கு ஊக்கமும் நம்பிக்கையும் வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. கௌரவ விருந்தினர்: புகழ்பெற்ற தமிழ் அறிஞர் ஸ்ரீ அருள் நடராஜன், மற்றும் முக்கிய பேச்சாளர்: தொழிலதிபர் ஸ்ரீ ஏ.என்.எஸ். கோவிந்தசுவாமி ஆகியோர் நிகழ்வில் கலந்து, புத்தகத்தின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்தினர். You Make Yourself தற்போது Amazon மற்றும் Flipkartஇல் கிடைக்கிறது, மற்றும் பெண்களுக்கு தன்னம்பிக்கை மற்றும் சுயமெய்யைக் கண்டுபிடிக்கும் ஊக்கமளிக்கும் ஒரு நூல் ஆகும்.

## தென்காசியில் பெப்ஸ் புதிய 'கிரேட் ஸ்லீப் ஸ்டோர்' தொடக்கம்!



தென்காசி டிச.17

இந்தியாவின் முன்னணி ஸ்பிரிங் மெத்தை மற்றும் தூக்கத் தீர்வுகள் பிராண்டான பெப்ஸ் இண்டஸ்ட்ரீஸ், தென்காசி நகரில் தனது புதிய 'பெப்ஸ் கிரேட் ஸ்லீப் ஸ்டோர்' விற்பனை மையத்தை தொடங்கியுள்ளது. இதன் மூலம் தமிழ்நாட்டில் தனது சில்லறை வர்த்தக இருப்பை மேலும் வலுப்படுத்தி, நகர்ப்புறம் மற்றும் வளர்ந்து வரும் சிறுநகர வாடிக்கையாளர்களுக்கு பிரீமியம் தூக்கத் தீர்வுகளை எளிதில் அணுகக்கூடியதாக மாற்றியுள்ளது. இந்த புதிய விற்பனை மையத்தை பெப்ஸ் இண்டஸ்ட்ரீஸ் விற்பனைப் பிரிவு பொது மேலாளர் S. ராஜேஷ் அவர்கள் திறந்து வைத்தார். சுமார் 1000 சதுர அடியில் அமைந்துள்ள இந்த அனுபவ ரீதியான ஸ்லீப் ஸ்டோர், ஸ்பிரிங், ஃபோம் மற்றும் கயிறு மெத்தைகள், பிரீமியம் தலையணைகள் மற்றும் படுக்கை உதிரிபாகங்களை ஒரே இடத்தில் பார்வையிட்டு தேர்வு செய்யும் வசதியை வழங்குகிறது. தமிழ்நாடு பெப்ஸ் நிறுவனத்திற்கு முக்கிய வளர்ச்சிச் சந்தையாக இருப்பதாகக் குறிப்பிட்ட S. ராஜேஷ், தரமான உறக்கம் குறித்த விழிப்புணர்வு அதிகரித்து வரும் நிலையில், தனிப்பயனாக்கப்பட்ட சேவை, நவீன தொழில்நுட்பம் மற்றும் பிரீமியம் தயாரிப்புகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சிறந்த அனுபவத்தை வழங்குவதில் பெப்ஸ் தொடர்ந்து உறுதியாக இருப்பதாக தெரிவித்தார்.



திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் திருவள்ளூர் மாவட்ட நிர்வாகம் (ம) மாவட்ட வேலைவாய்ப்பு (ம) தொழில்நெறி வழிகாட்டும் மையம் இணைந்து நடத்தும் மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் தொடர்பான குறும்பட பிரச்சார விழிப்புணர்வு வாகனத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் மு பிரதாப் கொடியசைத்து துவக்கி வைத்தார் உடன் வேலைவாய்ப்பு (ம) தொழில்நெறி வழிகாட்டும் மையம் உதவி இயக்குனர் விஜயா (ம) இளநிலை வேலை வாய்ப்பு அலுவலர் கள் பாலகிருஷ்ணன் ஜோதி மாவட்ட திறன் அலுவலர் லோகேஸ்வரி (ம) துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



## மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் கலெக்டர் சிவ சௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது!

திருப்பத்தூர் டிச.17

திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறைதீர்வு நாள் கூட்டம் மாவட்ட கலெக்டர் சிவ சௌந்தரவல்லி தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்டம் முழுவதும் இருந்து ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு தங்களது பிரச்சினைகள் குறித்து கலெக்டரிடம் மனு அளித்தனர். மனுக்களை பெற்றுக் கொண்ட கலெக்டர் உங்கள் கோரிக்கை மனுக்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு விரைவில் உரிய நடவடிக்கை எடுப்பதாக கலெக்டர் உறுதியளித்தார். இந்த கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன், மாவட்ட திட்ட இயக்குனர் உமா மகேஸ்வரி, பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் கதிர் சங்கர், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கண்ணன், மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ராஜபிரகாஷ் மற்றும் அனைத்து துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



### என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி:

## பர்கூரில் தி.மு.க. பிரசாரம்!

### மதியழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!!

கிருஷ்ணகிரி, டிச.17

முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தலின் பேரில் தமிழ்நாடு முழுவதும் 'என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி' பிரசாரம் தொடங்கப்பட்டது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதி பர்கூர் நகரில் என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி பிரசாரம் தொடங்கப்பட்டது. இதை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் டி.மதியழகன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். மேலும் பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பர்கூர் பேரூர் வார்டு எண்53ல் வீடு, வீடாக சென்று துண்டு பிரசுரங்களை எம்.எல்.ஏ. வழங்கி தி.மு.க.அரசின் சாதனைகள் குறித்து பேசினார். இந்த நிகழ்ச்சியில் பர்கூர் தொகுதி சட்டமன்ற மேற்பார்வையாளர் முனிராஜ், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், பேரூராட்சி தலைவர் சந்தோஷ் குமார், நகர செயலாளர் வெங்கட்டப்பன், பொதுக்குழு உறுப்பினர் பாலன், வர்த்தக அணி துணை அமைப்பாளர் கார்த்திகேயன், பாகம் எண் 53, 54 க்கான கவுன்சிலர்கள் துரைசாமி, ஆகாஷ், திமுக நிர்வாகிகள் மகேந்திரன், ரமேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### தனியார் கல்விக் சங்கத்திற்கு எதிராக

## உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்ட காங். சிறுபான்மை துறை முன்னாள் மாநில தலைவர் கைது!

வாணியம்பாடி, டிச.17

வாணியம்பாடி கோட்டை பகுதியில் 120 ஆண்டுகள் பழைமையான தனியார் கல்வி சங்கம் இயங்கி வருகிறது. இதில் சங்க உறுப்பினர்கள் 4 பேர் நிர்வாகத்திற்கு எதிராக செயல் பட்டதால் அவர்கள் நீக்க கல்வி சங்க ஆலோசனை மேற்கொள்ள நேற்று மாலை பொதுக்குழு கூட்டம் கூட்டப்பட்டது. இதில் நீக்கப்பட இருந்த தனியார் கல்விச்சங்க உறுப்பினர் சோழவரம் நியாஸ் அஹ்மத் வழக்கறிஞர் அஸ்லம் பாஷாவை நாடி வழக்கை வாதாட கூறியுள்ளார். இதன் அடிப்படையில் வழக்கறிஞர் அஸ்லாம் பாஷா தனியார் கல்விச் சங்கத்திற்கு வழக்கறிஞர் நோட்டீஸ் தனது உதவியாளர் மூலமாக அனுப்பி இருந்தார். அதனை கல்வி சங்க அலுவலக பணியாளர் வாங்க மறுத்ததால் ஆத்திரம் அடைந்த வழக்கறிஞர் அஸ்லாம் பாஷா தான் அனுப்பிய நோட்டீஸ் வாங்காததை கண்டித்தும், நீக்கப்பட உள்ள 4 பேரை நீக்கக்கூடாது என்று கோரி நேற்று காலை தனியார் கல்விச்சங்க அலுவலக நுழைவாயில்(சாலை ஓரம்) அமர்ந்து



உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டார். தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற நகர போலீசார் அனுமதியின்றி உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்ட வழக்கறிஞர் அஸ்லம் பாஷாவை கைது செய்து தனியார் மண்டபத்தில் சிறை வைத்து மாலை விடுவிக்கப்பட்டார்.

இதனால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பான சூழல் காணப்பட்டது. இந்த நிலையில் நேற்று மாலை தனியார் கல்வி சங்க பொதுக்குழு கூட்டம் நடைபெற்றது. இதில் கல்வி சங்கத்துக்கு எதிராக செயல்பட்ட நான்கு பேரை ஒருமனதாக நீக்கப்பட்டனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் தேர்வுநிலை பேரூராட்சி, கிருஷ்ணகிரி சென்னை தேசிய நெடுஞ்சாலை, பர்கூர் துணை காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் அருகில், கலைஞர்நகர்ப்புறமேம்பாட்டுத்திட்டம் 2025–26 கீழ், ரூ.4 கோடியே 39 இலட்சம் மதிப்பில் கட்டப்படவுள்ளபுதியபேருந்துநிலையகட்டுமானபணிகளுக்குமாவட்டஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் , பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன் ஆகியோர் பூமி பூஜை செய்து, பணிகளை துவக்கி வைத்தனர். உடன், பர்கூர் பேரூராட்சி தலைவர் ச.சந்தோஷ் குமார்,செயல்அலுவலர்.குமார்மற்றும்பேரூராட்சிஉறுப்பினர்கள்மற்றும்அரசுஅதிகாரிகள் மற்றும் திமுக தொண்டர்கள் கலந்து கொண்டனர்.

### தர்மபுரி அருகே

## கட்சி தலைவர்கள் பேனர்கள் கிழிப்பு!

### போலீசார் குவிப்பு – பரபரப்பு!!



கடத்தூர் டிச.17–

தர்மபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப் பட்டி அருகே மோளயானூரில் முன்னாள் உயர் கல்வித் துறை அமைச்சர், பி பழனியப்பன் இல்ல திருமண விழா நடந்தது.

தமிழக முதல்வர், மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன்,தனியரசு, முத்தரசன் உள்ளிட்ட கட்சி தலைவர்கள் வருகை தந்தனர். இந்த சூழ்நிலையில், கடத்தூர் அருகே திண்டலானூர் கிராமத்தி ல்திருமாவளவன் மற்றும் துணை முதல்வர் அவர்களுக்காக வரவேற்பு பேனர் வைக்கப்பட்டிருந்தது.

இந்த பேனரை இரவோடு இரவாக அடையாளம் தெரியாத மர்ம நபர்களால்,கிழிக்கப்பட்டுள்ளது.

இதனால் இப்பகுதியைச் சேர்ந்த விடுதலை சிறுத்தைகள் கட்சியினர், மற்றும் திண்டனூர் ஊர் பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர் இதனால் ஏற்பட்ட பதற்றத்தினை தவிர்க்கும் வகையில் , பாதுகாப்பிற்காக 50க்கும் மேற்பட்ட போலீசார்குவிக்கப்பட்டுள்ளனர்.



திருப்பத்தூர் பேருந்து நிலையம் எதிரே இந்திய சுதந்திரப் போராட்ட மாவீரர் பெரிய மருதுவின் 277வது பிறந்த நாளை முன்னிட்டு மாமன்னர் மருதிருவர் இளைஞர் நல அறக்கட்டளையின் சார்பில், நடைபெற்ற அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியில் கூட்டுறவுத்துறை அமைச்சர் பெரியகருப்பன் கலந்துகொண்டு அன்னதானம் வழங்கினார்.

### தம்மம்பட்டி அருகே

## 17 வயது மாணவியின் திருமணம் தடுத்து நிறுத்தம்; அதிகாரிகள் அதிரடி!

தம்மம்பட்டி, டிச. 17

தம்மம்பட்டி அருகே 17 வயது மாணவிக்கு நடக்க இருந்த திருமண ஏற்பாட்டைய,சைல்டு லைன் அதிகாரிகள் தடுத்து நிறுத்தினர்.

தம்மம்பட்டி அருகே கொண்டையம்பள்ளியை சேர்ந்த 17 வயது நர்சிங் கல்லூரி மாணவிக்கு, தம்மம்பட்டியை சேர்ந்த ஒருவருடன் திருமண ஏற்பாடு நடந்து வந்தது.

இதுகுறித்த தகவல், சைல்டு லைன் அமைப்பிற்கு தெரியவந்ததை அடுத்து, அந்த மாணவி மற்றும் அவரது பெற்றோரிடம், ன் அதிகாரிகள் நேரில் விசாரணை நடத்தினர்.

பின்னர், தம்மம்பட்டி போலீசார் பாதுகாப்புடன் அந்த மாணவியை மீட்டு, சேலம் காப்பகத்தில்

சேர்ந்தனர். இதுகுறித்து சைல்டு லைன் அமைப்பின் புகாரின் பேரில் போலீசார் வழக்கு பதிவு விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.



கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, நெடுஞ்சாலைத்துறையின் சார்பில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

## காவேரிப்பட்டினம் பகுதியில் செங்கரும்பு விளைச்சல் அமோகம்!



கிருஷ்ணகிரி, டிச.16

பொங்கல் பண்டிகை வருவதையொட்டி எதிர்நோக்கி, கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் செங்கரும்புகளை அதிகள வில் சாகுபடி செய்துள்ளனர்.

கடந்தாண்டை காட்டிலும் தற்போது கரும்பு விளைச்சல் அதிகரித்துள்ளது. கடந்த காலங்களில் கிருஷ்ணகிரி மாவட்ட வியாபாரிகள் பொங்கல் பண்டிகைக்கு தேவையான கரும்புகளை, சேலம் மாவட்டத்திலிருந்து மொத்தமாக கொள்முதல் செய்து லாரி மூலம் கொண்டு வந்து விற்பனை செய்து வந்தனர். இந்த ஆண்டு ஆயிரக்கணக்கான ஏக்கரில் கரும்பு பயிரி டப்பட்டுள்ளது. மாவட்டத்தில் தொடர் மழை பெய்ததால், செங்கரும்பு விளைச்சல் உள்ளது. அமோகமாக இங்கு பயிரிடும் கரும்பை தமிழக அரசே கொள்முதல் செய்வதால் விவசாயிகளுக்கு நல்ல வருவாய் கிடைத்து வருகிறது. இதனால், மாவட்டத்தில் ஏராளமான விவசாயிகள் கரும்பு சாகுபடியில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். தொடர் மழை காரணமாக எதிர்பார்த்த அளவில் கரும்பு நல்ல விளைச்சலை தந்துள்ளது,' இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியில் உள்ளனர்.

### பென்னாகரம் அருகே

## மரத்தில் இருந்து விழுந்த கூலித் தொழிலாளி சாவு!

பென்னாகரம், டிச.17

பென்னாகரம் அருகே தென்னை மரத்தில் ஏறி தேங்காய் பறித்த போது தவறி விழுந்ததில் கூலித் தொழிலாளி பரிதாபமாக உயிரிழந்தார் .

ஈரோடு மாவட்டம் வீரப்பன் சத்திரம் பகுதியை சேர்ந்தவர் ராஜா. மகன் தினேஷ்குமார் (30). கூலி தொழிலாளி இவர்கடந்த 14ஆம் தேதி தனது மனைவி பிருந்தாவுடன் பென்னாகரம் அருகே உள்ள எர்ரபையனஅள்ளி எம்.கே.எஸ் நகருக்கு தனது உறவினர் ராஜேந்திரன் வீட்டுக்கு வந்துள்ளார் பின்னர் தினேஷ் குமார், ராஜேந்திரன் தோட்டத்தில் உள்ள தென்னை மரத்தில் தேங்காய் பறிக்க ஏறினர். அப்போது எதிர்பாராத விதமாக தினேஷ் குமார் கீழே விழுந்து விட்டார் . உறவினர்கள் அவரை மீட்டு தனியார் ஆம்புலன்ஸ் மூலம் பென்னாகரம் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். அங்கு பரிசோதித்த டாக்டர்கள் ஏற்கனவே இதில் பலமாக அடிபட்டு இறந்து விட்டதாக தெரிவித்தனர். இந்த நிலையில் தினேஷ்குமாரின் மனைவி பிருந்தா கொடுத்த புகாரின் பேரில் பென்னாகரம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர் .

### குமாரபாளையத்தில்

## ஐயப்ப சாமி ஊர்வலம்!

### திருவிளக்கு பூஜையுடன் அன்னதானம்!

குமாரபாளையம், டிச. 17

அகில பாரத ஐயப்பா சேவா சங்கம், குளத்துக்காடு கிளை, ஸ்ரீதர்மசாஸ்தா சபரி யாத்திரை குழுவின் சார்பில் 24ம் ஆண்டு விழா, திருவிளக்கு பூஜை, அன்னதான விழா, வேணு குருசாமி தலைமையில் நடந்தது. 54ம் ஆண்டு யாத்திரை செல்லும் வேணு குருசாமியை, ஜெயபால் தேசிக தம்புரான் சுவாமிகள், அகில பாரத ஐயப்பா சேவா சங்க, மத்திய செயற்குழு உறுப்பினர் ஜெகதீஷ் உள்ளிட்ட பல குரு சுவாமிகள் வாழ்த்தினர். காவிரி ஆற்றிலிருந்து தீர்த்தக்குட ஊர்வலம் நடந்தது.,

இதில் ஐயப்ப சுவாமி, விநாயகர், முருகன் , சிவலிங்கம், பார்வதி தேவி ஆகிய சுவாமிகள், மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில், சிறப்பு அலங்காரத்தில் அருள்பாலித்தவாறு வந்தனர். இந்த ஊர்வலத்தில் ஆபரண பெட்டி, கற்பூர ஆழி ஆகியன இடம்பெற்றன.

காவிரி ஆற்றிலிருந்து, சேலம் சாலை இடைப்பாடி சாலை, பள்ளிபாளையம் சாலை, ஆனங்கூர் சாலை உள்ளிட்ட பல முக்கிய சாலைகளின் வழியாக வந்து, குளத்துக்காடு கொங்கு பவர்லூம் உரிமையாளர்கள் சங்க மண்டபத்தில் நிறைவு பெற்றது. திருவிளக்கு பூஜை, பக்தி பாடல்கள் பஜனை, மற்றும் சிறப்பு அபிஷேக,அலங்கார தீபாரனை நடைபெற்றது. பக்தர்களுக்கு பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

## பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரராகிய திருநெல்வேலி மாவட்டம் இராதாபுரம் வட்டம் கதவு எண் 2/187 வடக்கு தெரு, வள்ளியூர் 627117 முகவரியில் வசிக்கும் மாணிக்கராஜ் என்பவரின் முறையான தகவலின் பேரில் தெரிவிப்பது யாதெனில்.

எனது கட்சிக்காரர் வள்ளியூர் சார்பதிவகத்தில் 1240/2023 பதிவு செய்யப்பட்ட விற்பனை பத்திரம் சுமார் 5.16 சென்ட் சொத்தை அனுபவித்து வருகின்றார். மேற்படி சொத்தை ஈடுகெட்டி எனது கட்சிக்காரர் வெரிடாஸ் பைனான்ஸ் லிமிடெட் நிதி நிறுவனத்தில் கடன் கோரும்போது சொத்து சம்மந்தமான ஆவணங்கள் சரிபார்க்கப்பட்டது. அப்போது தன் சொத்திற்கு சம்மந்தமான மூலப்பத்திரத்தை (1657/2012) எனது கட்சிக்காரர் ஜெராக்ஸ் எடுப்பதற்காக கடந்த 11/12/2025 அன்று பேருந்தில் சென்ற போது அவரிடம் இருந்து சொத்திற்கு சம்மந்தமான மேற்படி மூல ஆவணம் தொலைந்தது தெரியவந்தது. ஆகவே மேற்படி காணாமல் போன அசல் மூலஆவணத்தை எடுத்து தன் வசம் வைத்திருப்பவரோ அல்லது சொத்தின் பெயரில் யானுமே உரிமையோ, ஆட்சேபனையோ,பின் தொடர்ச்சியோ இருந்தாலோ நாளை முதல் 15 நாட்களுக்குள் எழுத்து மூலமாக தக்க ஆதாரத்துடன் கீழ்க்கண்ட முகவரிக்கு தெரியப்படுத்தவும். தவறும் பட்சத்தில் அதன்பின் வரும் எந்தவிதமான ஆட்சிசேபனையும் எனது கட்சிக்காரரை எந்த வில்லங்கத்திற்கும் கட்டுபடுத்தாது என்பதை இந்த பொதுஅறிவிப்பின் மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன்.

GO. Ms. No. 202/17, 2.
No. 328/84 24,LAW CHAMBER,
NAGERCOIL

**M. MARIA SINGAM** . M. A. LLB
ADVOCATE/
NOTARY PUBLIC



### மஞ்சாரப்பட்டியில்

## ஸ்ரீ முத்தத்ராய சுவாமி பக்தர்கள் 26-ம் ஆண்டு பஜனை திருவிழா!

பென்னாகரம், டிச.17

தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் அடுத்த ஏரியூர் ஒன்றியத்திற்கு உட்பட்ட நெருப்பூரில் அமைந்துள்ள ஸ்ரீ முத்தத்ராய சுவாமிக்கு ஆண்டுதோறும் விழா எடுக்கப்படும்.

சாம்பள்ளிகாடு, குருக்களையனூர், சிங்கிலிமேடு தொட்டிக்குளம், நெருப்பூர் பண்ணவாடியான் காடு, புதுமாங்குறிச்சி உள்ளிட்ட கிராமங்களில் இருந்து 1000 க்கும் மேற்பட்ட பக்தர்கள் ஆண்டுதோறும் கார்த்திகை மாதம் முத்தத்ராய சுவாமிக்கு மாலை அணிந்து 48 நாள் விரதம் இருந்து மஞ்சாரப்பட்டிகாடு கிராமத்தில் அமைந்துள்ள கோட்டை மாரியம்மன் கோவிலில் பக்தர்கள் முத்தத்ராய சுவாமிக்குபம்பைமேளங்கள்முழங்கபஜனை நடைபெறும்.

இதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு 26ம் ஆண்டாக முத்தத்ராய சுவாமிக்கு பஜனை திருவிழா நடைபெற்றது. இந்த பஜனை திருவிழாவில் முத்தத்ராய சுவாமிக்கு அலங்காரம் செய்யப்பட்டு தீபா ஆராதனைகாட்டப்பட்டது. அதன்பின்பு வருகின்ற புதன்கிழமை சாமி அழைத்தல் நிகழ்வும் வியாழக்கிழமை சக்தி கரகம், பால்குடம் இளநீர் குடம், தீர்த்த குடம் எடுத்தல், வெள்ளிக்கிழமை முத்தத்ராய சுவாமிக்கு மாலை அணிந்திருந்த பக்தர்கள் மஞ்சா ரப்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள கோட்டை மாரியம்மன் கோயிலில் இருந்து நெருப்பூர் வரை நடந்து சென்று கோவிலில் உள்ள சுவாமிக்கு பூஜைகள் செய்து மாலை கழட்டும் நிகழ்வு நடைபெறும்.

இதில் மாலை அணிந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட பக்தர்கள் உலகநலன் வேண்டி கூட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.



## கிறிஸ்மஸ் கொண்டாட்டம் பரிசு வழங்கல்!

திருப்பூர், டிச.17

திருப்பூர் மாவட்டம் தாராபுரம் அருகே காரத்தொழுவு கிறிஸ்தவ சபை வானத்தின் வாசல் குளோரி ஆப் கிரேஸ்ட் சர்ச் இந்தியா என்ற அமைப்பு செயல்பட்டு வருகிறது இதில் வரும் சபை விசுவாசிகளுக்கு பரிசுப் பொருட்கள் தாராபுரம் நகர திமுக ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளரும் தாராபுரம் கோட்டம் தாராபுரம் காங்கேயம் தொகுதிக்குட்பட்ட எஸ்சி எஸ்டி ஆணையத்தின் உறுப்பினர் சமூக அலுவலர் சிவசங்கர் கிறிஸ்தவ மக்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள் தெரிவித்த உடன் சபை போதகர் பாஸ்டர் தினகரன் தாய் தந்தையுடன் பரிசு பொருளை பெற்றுக்கொண்டார்.



தென்காசியில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கம் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சியர் கமல்கிஷோர் பெற்றுக்கொண்டார்.

## வாணியம்பாடி அருகே விஸ்டம் பார்க் சர்வதேச பள்ளியில் ஒரு நாள் கலை, அறிவியல் கண்காட்சி!



வாணியம்பாடி,டிச.17

திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி செங்கலி குப்போம் பகுதியில் இயங்கி வரும் விஸ்டம் பார்க் சர்வதேச பள்ளியில் விஸ்டம் எக்ஸ்போ 2025 என்ற பெயரில் ஒரு நாள் கலை மற்றும் அறிவியல் கண்காட்சி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு பள்ளியின் பொதுச் செயலாளர் சி. முஹம்மத் பர்வேஸ் தலைமை வகித்தார். விஸ்டம் பார்க் துவக்கப்பள்ளி தாளாளர் ஹெச்.அப்துல் மாலிக் வசீம், பள்ளி துணை முதல்வர் ஆனந்த் கால்சன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளி முதல்வர் டாக்டர் சாதிக் பாஷா அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு அழைப்பாளராக ஓசூர் மைஜா அறக்கட்டளை நிறுவனர் டாக்டர் முஹம்மத் அலிமுத்தீன் கலந்துகொண்டு கண்காட்சியை தொடங்கி வைத்து தொழில்நுட்பம் குறித்து விளக்கிப் பேசினார். பின்னர் காட்சியை பார்வையிட்டார். சிறப்பு விருந்தினராக வழக்கறிஞர் எம்.ஏ.சினேகா கலந்து கொண்டு பெண்கள் அதிகாரம் குறித்து எடுத்துரைத்தார்.

கண்காட்சியில் சுமார் 600 மாணவர்கள் கலந்து கொண்டு 500 க்கும் மேற்பட்ட மாதரிகளை காட்சிப்படுத்தினர்.

இதில் பள்ளி மாணவர்கள் தங்களது அறிவியல் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் குளிர்கால அதிசய உலகம், வால்கனேவ், வளிமண்டல அடுக்குகள்,மனித உடல் உறுப்புகள், ஆரோக்கியமான உணவுகள், அறிவியல் தொடர்பான சுற்றுச்சூழல் மாதிரிகள், சூரிய குடும்பம் செயல்படும் விதம், மோட்டார் வாகனங்கள் செயல்படும் விதம், தமிழ் கலாச்சாரம் ஆகியவற்றை செய்திருந்தனர். மேலும் தமிழ் உருது, ஆங்கிலம், கணிதம், வரலாறு, கணினி தொடர்பான பல மாதிரிகளை மாணவர்கள் தயார் செய்து அதன் தன்மைகளை பொதுமக்கள் மற்றும் பெற்றோர்களுக்கு விளக்கினர். முடிவில் கல்வி ஒருங்கிணைப்பாளர் பைஜா தஹசீன் நன்றி கூறினார்.